# ஓவியப்போட்டியில் மாநில அளவில் வெற்றி பெற்று ஹில்டன் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி மாணவி சாதனை

## அமைச்சர்கள் அன்பில் மகேஷ் பொய்யாமொழி, மு.பெ.சாமிநாதன் பாராட்டு



**தென்காசி அக்.18:** தமிழ்நாடு முதலமைச்சர் மு. க. ஸ்டாலின் கல்வி வளர்ச்சிக்கு ஆற்றி வரும் அரும் தொண்டுகளையும், செயல்படுத்தி வரும் சிறப்பான நலத்திட்டங்களையும் மாணவர் சமுதாயம் அறிந்து கொள்ளும் வகையில் செய்தி மக்கள் தொடர்புத் துறையின் ஊடக மையம் பெருந்தலைவர் காமராசர் பிறந்தநாளை முன்னிட்டு பல்வேறு கலைப்போட்டிகளை நடத்தியது. இதில் ஹில்டன் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி மாணவி ஜோன்னா கெரன் 'நான் ஓவியன்;' என்னும் தலைப்பில் ஓவியப்போட்டியில் மாநில அளவில் வெற்றி பெற்று சாதனை படைத்துள்ளார். மாணவியை பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் ஆகியோர் மாணவி. ஜோன்னா கெரனை பாராட்டி சான்றிதழும், பதக்கமும் வழங்கினர். தொடர்ந்து மாணவியை பள்ளித் தாளாளர், செயலாளர், பள்ளி முதல்வர், தலைமை ஆசிரியை மற்றும் அனைத்து ஆசிரிய ஆசிரியைகளும் பாராட்டினர்.

# விபத்து, மாசற்ற தீபாவளியை கொண்டாட கலெக்டர் க.இளம்பகவத் வேண்டுகோள்

திருச்செந்தூர் அக்.18

விபத்து, ஒலி மற்றும் மாசற்ற தீபாவளியை கொண்டாடுமாறு பொதுமக்களுக்கு தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் க.இளம்பகவத் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

தீபாவளித் திருநாள் மக்களால் மகிழ்ச்சியுடன் கொண்டாடப்படும் திருநாளாகும். இத்திருநாளில் சிறுவர்கள் முதல் பெரியவர்கள் வரை பட்டாசுகளை வெடித்து மகிழ்ச்சியை வெளிப்படுத்துவார்கள். அதேவேளையில், பட்டாசுகளை வெடிப்பதால் நம்மை சுற்றியுள்ள நிலம், நீர், காற்று உள்ளிட்டவை பெருமளவில் மாசுபடுகின்றன. பட்டாசு வெடிப்பதால் எழும் அதிகப்படியான ஒலி மற்றும் காற்று மாசினால் சிறுகுழந்தைகள், வயதான பெரியோர்கள் மற்றும் நோய் வாய்பட்டுள்ள வயோதிகர்கள் உடல் அளவிலும் மனதளவிலும் பெரும் பாதிப்புக்கு உள்ளாகிறார்கள்.

பட்டாசு உற்பத்தி மற்றும் விற்பனைக்கு தடை கோரி உச்ச நீதிமன்றத்தில் தொடரப்பட்ட பொது நல வழக்கில் உச்ச நீதிமன்றம் தனது 23.10.2018 ஆம் நாளிட்ட ஆணையில், சுற்றுச்சூழலுக்கு உகந்த மூலப்பொருட்களை பயன்படுத்தி பட்டாசுகளை உற்பத்தி செய்ய வேண்டும் எனவும், வருங்காலத்தில் பசுமைப் பட்டாசுகளை உற்பத்தி செய்து விற்பனை செய்ய வேண்டும் எனவும் நிபந்தனைகளை விதித்தது.

மேலும், உச்ச நீதிமன்றம் தனது ஆணையில், பட்டாசுகளை வெடிப்பதால் காற்றின் தரம் பாதிக்கப்படுவது குறித்து போதுமான விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும் எனவும், திறந்தவெளியில் குறிப்பிடப்பட்ட பகுதிகளில் மட்டுமே பட்டாசுகளை வெடிக்க மாநில அரசுகள் வலியுறுத்த வேண்டும் எனவும் அறிவுறுத்தியுள்ளது.

உச்ச நீதிமன்ற தீர்ப்பின் அடிப்படையில், தமிழ்நாடு அரசு 2018-ஆம் ஆண்டிலிருந்து தீபாவளி பண்டிகையன்று காலை 6 முதல் 7 மணி வரையும், இரவு 7 முதல் 8 மணி வரையில் மட்டுமே ஒலி எழுப்பும் பட்டாசுகளை வெடிப்பதற்கு நேரம் நிர்ணயம் செய்து அனுமதி வழங்கியது. இந்த ஆண்டும் தீபாவளி பண்டிகை தினத்தன்று, கடந்த ஆண்டைப் போலவே காலை 6 முதல் 7 மணி வரையிலும், இரவு 7 முதல் 8 மணி வரை மட்டுமே பட்டாசுகளை வெடிக்கவேண்டும்.இவ்வாறு அவர் தெரிவித்தார்.

சங்கரன்கோவிலில்

# அதிமுக 54ம் ஆண்டு துவக்க விழா: இனிப்புகள் வழங்கி கொண்டாட்டம்



**சங்கரன்கோவில், அக். 18** சங்கரன்கோவிலில் நகர அதிமுக சார்பில் கட்சியின் 54 வது ஆண்டு துவக்க விழா நிகழ்ச்சி நடைபெற்றது.

நிகழ்ச்சிக்கு நகரச் செயலாளர் ஆறுமுகம் தலைமை வகித்தார். மாவட்ட ஜெயலலிதா பேரவை தலைவர் எஜமான் செந்தில்குமார், பொதுக்குழு உறுப்பினர் காளிராஜ், மாவட்ட பொருளாளர் சண்முகையா, விவசாய அணி செயலாளர் பரமகுருநாதன், ஒன்றிய செயலாளர்கள் ரமேஷ், செல்வராஜ், செல்வம் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

நிகழ்ச்சியை முன்னிட்டு பழைய பேருந்து நிலையம் அருகே அமைக்கப்பட்டுள்ள முன்னாள் முதல்வர்கள் எம்ஜி ஆர், ஜெயலலிதா ஆகியோரின் திருவுருவப்படத்திற்கு முன்னாள் அமைச்சரும் மாநில மகளிர் அணி துணைச் செயலாளருமான வி. எம். இராஜலெட்சுமி மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். இதனை முன்னிட்டு பொதுமக்களுக்கு இனிப்புகள் வழங்கப்பட்டது. நிகழ்ச்சியில் நகரப் பொருளாளர் வேலுச்சாமி, நகர்மன்ற உறுப்பினர்கள் சரவணகுமார், ராமதுரை, மாரிச்சாமி, பரமசிவன், முத்துலட்சுமி, ராஜேஸ்வரி கந்தன், நகர பேரவை சௌந்தர் (எ)சாகுல் ஹமீது, அண்ணா தொழிற் சங்கம் ஹரிஹர கருப்பையா, தலைமை கழக பேச்சாளர்கள் தீக்கனல் லட்சுமணன், ராமசுப்பிரமணியன், தகவல் தொழில்நுட்ப பிரிவு மாவட்ட துணை செயலாளர் மாரிச் செல்வம், நகர பொறுப்பாளர் சுடலை சங்கர், நிர்வாகிகள் அந்தோணி டேனியல், குட்டி மாரியப்பன், கோபால் ரத்தினம், பிஜிபி ராமநாதன், நிவாஸ், சுந்தரபாண்டியன், நவநீதகிருஷ்ணன் வழக்கறிஞர் கணேசன், நிர்வாகிகள் மூர்த்தி, ஐயப்பன், தங்கம், பட்டு சங்கர், பாபு, காளிராஜ், உமா மகேஸ்வரன், கல்யாணசுந்தரம், கோடையிடி கோவிந்தன், சங்கர் கணேஷ், மகளிர் அணி மாரியம்மாள், பாக்கியம் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# ராஜேந்திரா விஸ்டம் பள்ளியில் தீப ஒளி திருநாள்



**சுரண்டை அக்.18:** சுரண்டை இராஜேந்திரா விஸ்டம் பள்ளியில் "தீப ஒளி திருநாள்" கொண்டாடப்பட்டது.

மாணவர்கள் அனைவரும் வண்ணமயமான ஆடை அணிந்தும், பாதுகாப்பான வெடிகளை வெடித்தும் கொண்டாடி மகிழ்ந்தனர்.

இவ்விழாவில் வெடிகளை பாதுகாப்பாக கையாளும் முறையை தலைமையாசிரியர் முருகராஜன் மாணவர்களுக்கு எடுத்துரைத்தார். விழாவின் இறுதியாக மாணவர்களுக்கு இனிப்புகள் வழங்கப்பட்டது.

இந்நிகழ்ச்சிக்கு குழல் வாய்மொழி அம்மாள் சிவன் நாடார் அறக்கட்டளை நிறுவனத்தின் நிறுவனர் சிவ பபிஸ்ராம், பள்ளியின் செயலர் சிவ டிப்ஜினிஸ் ராம், முதல்வர்கள் பொன் மனோன்யா, மற்றும் புஷ்பா ஆகியோர் தலைமை வகித்தனர். ஆசிரியர்கள் மஞ்சுளா, வனிதா விழாவை ஒருங்கிணைந்து நடத்தினர்.



**தென்காசி மாவட்டத்தில் தமிழ்நாடு முதலமைச்சர் வருகைக்கான முன்னேற்பாடு பணிகளை மாவட்ட கலெக்டர் ஏ.கே.கமல்கிஷோர், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அரவிந்த், மாவட்ட வருவாய் அலுவலர் ஜெயச்சந்திரன் ஆகியோர் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டனர்.**



**தென்காசி வடக்கு மாவட்டத்திற்கு உட்பட்ட தங்கப்பழம் சட்டக் கல்லூரி மாணவர்கள் நேற்று சட்டப்பேரவை நிகழ்வுகளை காண வருகை தந்தனர். அவர்களை தென்காசி வடக்கு மாவட்ட செயலாளர் ராஜா எம்எல்ஏ சட்டப்புத்தகத்தினை வழங்கி வரவேற்று வாழ்த்து தெரிவித்தார். உடன் கல்லூரி பேராசிரியர்கள் மற்றும் பலர் உடன் இருந்தனர்.**



**குத்துக்கல்வலசை ஊராட்சிமன்ற அலுவலகத்தில் பணியாற்றும் அலுவலக பணியாளர்கள், தூய்மைபணியாளர்கள், தூய்மைக்காவலர்கள், மேல்நிலைநீர்தேக்கதொட்டி இயக்குபவர்கள், வார்டு உறுப்பினர்கள் மற்றும் சுகாதார பணியாளர்கள் என 75க்கும் மேற்பட்டோருக்கு புத்தாடைகள், இனிப்பு, பட்டாசுகள் வழங்கி ஊராட்சி மன்ற தலைவர் செ.சத்யராஜ் மற்றும் ஊராட்சி மன்ற துணைத்தலைவர் தீபாவளி வாழ்த்துக்களை தெரிவித்தனர்.**



**கடையம் ஊராட்சி ஒன்றியம் அடச்சாணி ஊராட்சியில் பஞ்சாயத்து தலைவர் மதியழகன் தலைமையில் உங்களுடன் ஸ்டாலின் சிறப்பு முகாம் நிகழ்வில் கடையம் யூனியன் சேர்மன் விஎஸ்.செல்லம்மாள் முருகேசன் தொடங்கி வைத்தார் இந்நிகழ்ச்சியில் கடையம் கிழக்கு ஒன்றிய திமுக ஒன்றிய செயலாளர் குமார் கலந்து கொண்டனர்**

கோவில்பட்டியில்

# அதிமுக 54-ம் ஆண்டு தொடக்க விழா



**கோவில்பட்டி அக் 18** அதிமுகவின் 54ம் ஆண்டுதொடக்க விழாவை முன்னிட்டு கோவில்பட்டி சட்ட மன்ற உறுப்பினர் அலுவலகம் அருகில் அமைந்துள்ள தலைவர்கள் அண்ணா எம்ஜிஆர் ஜெயலலிதா ஆகியோர் சிலைகளுக்கு அதிமுகவினர் மாலை அணிவித்து மரியாதை செலுத்திவிட்டு பொது மக்களுக்கு இனிப்பு வழங்கி கொண்டாடினர்கள் .

இந்நிகழ்வில் பொதுக் குழு உறுப்பினர் இராமச்சந்திரன், நகர செயலாளர் விஜயபாண்டியன், மாநில வழக்கறிஞர் பிரிவு துணை செயலாளர் ஈஸ்வரமூர்த்தி, ஒன்றிய மத்திய ஒன்றிய செயலாளர் செயலாளர் பழனிச்சாமி, கிழக்கு ஒன்றிய செயலாளர் அன்புராஜ், மேற்கு ஒன்றிய செயலாளர் அழகர்சாமி, மாவட்ட மாணவரணி துணைத் தலைவர் அத்தை கொண்டான் செல்வக்குமார், மாவட்ட மாணவரணி துணைத் தலைவர் நாலாட்டின்புதூர் பொறியாளர் தாஸ், ஒன்றிய செயலாளர் போடு சாமி மாவட்ட இளைஞர் இளம்பெண்கள் பாசறை செயலாளர் எம்ஆர்வி கவியரசன், மாவட்ட வழக்கறிஞர் பிரிவு செயலாளர் ஜி எம். சங்கர்கணேஷ், மாவட்ட அம்மா பேரவை இணைச் செயலாளர் துறையூர் கணேஷ் பாண்டியன், மாவட்ட அமைப்புசாரா ஓட்டுநர்கள் அணி செயலாளர் லட்சுமணபெருமாள், நகராட்சி கவுன்சிலர்கள் செண்பகமூர்த்தி, அதிமுக நகர அவைத் தலைவர் அப்பாசாமி நிர்வாகிகள் எம்.ஆர். வெள்ளைச்சாமி, பழனிமுருகன், அல்லித்துரை, மகளிரணியினர் கோமதி ரேவதி சுப்புலட்சுமி ராமலட்சுமி உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்

# ஹில்டன் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளியில் தீபாவளி கொண்டாட்டம்



**குற்றாலம் அக்.18:** பழைய குற்றாலம் ஹில்டன் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளியில் தீபாவளித் திருநாள் கொண்டாட்டம் பள்ளி கலையரங்கத்தில் மிகச் சிறப்பாக கொண்டாடப்பட்டது. விழாவில் பள்ளித் தாளாளர் ஆர்.ஜே.வி.பெல், பள்ளிச் செயலாளர் கிரேஸ் கஸ்தூரி பெல் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்டனர். நமது பாரம்பரிய நடனமாகிய பரத நாட்டியத்துடன் தொடங்கிய தீபாவளி நிகழ்ச்சிகள், ஆரம்பப் பள்ளி மாணவர்களின் வண்ணமிகு தீபாவளி நடனம், உயர்நிலைப் பள்ளி மாணவர்களின் கருத்து மிக்க ஆடல், தீபாவளியின் சிறப்பினை உணர்த்தும், மேல்நிலைப் பள்ளி மாணவர்களின் சிற்றுரை போன்றவற்றுடன் தீபாவளி கொண்டாட்டம் இனிதே அரங்கேறியது. பள்ளித் தாளாளர் ஆர்.ஜே.வி.பெல் தீபாவளி சிறப்புரை ஆற்றினார். பள்ளி முதல்வர் மோன்சி கேமத்தாய் நன்றியுரை நவில நாட்டுப்பண்ணுடன் விழா இனிதே நிறைவடைந்தது.



**கடையநல்லூர் ஒன்றியம் கூலிப்பெத்தை அருணாசலபுரம் வடுவுச்சி அம்மன் திருக்கோவில் கொடை விழாவுக்காக மாவட்டதிமுகசார்பில்மாவட்டசெயலாளர்வே.ஜெயபாலன் நன்கொடை வழங்கினார்.**



**தென்காசிசட்டமன்றதொகுதிபார்வையாளர்கலைக்கதிரவன் தென்காசி தெற்கு மாவட்ட செயலாளர் வே.ஜெயபாலனுக்கு இனிப்பு வழங்கி தீபாவளி வாழ்த்துக்கள் கூறினார்.**

# உங்களுடன் ஸ்டாலின் முகாம்: தென்காசி நகர்மன்ற தலைவர் சாதிர் தொடங்கி வைத்தார்



தென்காசி அக்.18

தென்காசி நகரத்தில் உங்களுடன் ஸ்டாலின் முகமானது இறுதி கட்டமாக இசக்கி மஹாலில் நடைபெற்றது. 32,33 வார்டுக்கு உட்பட்ட பொதுமக்களுக்காக நடைபெற்ற நிகழ்வினை நகரக் கழக செயலாளருமான நகர் மன்ற தலைவருமான சாதிர் தொடங்கி வைத்தார் இந்நிகழ்வில் நகராட்சி ஆணையாளர் ரவிச்சந்திரன் முன்னிலை வகித்தார். நிகழ்வில் நகர் மன்ற உறுப்பினர்கள் ராமகிருஷ்ணன், சுப்பிரமணியன், மண்டல துணை வட்டாச்சியர் ஆறுமுகம், சுகாதார அலுவலர் முகம்மது இஸ்மாயில், சுகாதார ஆய்வாளர்கள் மாரிமுத்து, சரவணன், சர்வேயர் கல்யாணராமன், உதவிவருவாய் அலுவலர் பாலசுப்பிரமணியன், வருவாய் ஆய்வாளர்கள் ஜெயன், ராமசுப்பிரமணியன், வருவாய் உதவியாளர்கள் முருகன், கணேசன், சிவகாமி, சுப்புலட்சுமி, பிரகாஷ், பிரேம், இளநிலை உதவியாளர்கள் முருகேசன், செந்தில் துப்புரவு பணி மேற்பார்வையாளர் முத்துக்குமார் ,சுடலை, மாவட்ட பொறியாளர் அணி தலைவர் தங்கபாண்டியன், நகர வர்த்தக அணி துணை அமைப்பாளர் சன்ராஜா, இளைஞர் காங்கிரஸ் பிரேம்குமார், வட்டக் கழகச் செயலாளர்கள் அர்சுனன், ஆறுமுகம், கழகநிர்வாகிகள் பிஎல்ஏ2 சுரேஷ், சந்திரன், கஸ்வாபாய் உள்ளிட்டவர்களும் அபி எனர்ஜி விஜயகுமார், கூட்டணி கட்சியை சார்ந்த நிர்வாகிகள் துறை சார்ந்த அலுவலர்கள், பணியாளர்கள் மற்றும் பொதுமக்களும் திரளாக கலந்து கொண்டு மனுக்களை அளித்தனர். இதுவரை தென்காசி நகராட்சி இதுவரைநடைபெற்ற உங்களுடன் ஸ்டாலின் முகாமில் 6615 மனுக்கள் பெறப்பட்டுள்ளதாக தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது

# தூத்துக்குடி துறைமுகத்திற்கு சுரண்டை எஸ்.ஆர்.பள்ளி மாணவர்கள் களப்பயணம்



**சுரண்டை அக்.18:** சுரண்டை எஸ் ஆர் ஸ்கூல் ஆப் எக்ஸலன்ஸ் பள்ளி மாணவர்கள் தூத்துக்குடி துறைமுகத்திற்கு களப்பயணம் மேற்கொண்டனர். அங்கு அவர்கள் இந்திய போர்க்கப்பல் துறையின் செயல்பாடுகளைக் கண்டறிந்தனர். போர்க்கப்பலில் ஹலிகாப்டர் இறங்கும் தளம், கப்பலில் அமைந்துள்ள இயந்திரங்கள், திசை அறியும் கருவி, மாலுமி அறை, பீரங்கி, துப்பாக்கி உள்ளிட்ட கடற்படையின் ஆயுதங்களைக் கண்டறிந்தனர். கப்பலை இயக்கும் விதம், பாதுகாப்புப் படையின் பணிகள் முதலியவற்றை வழிகாட்டி மூலம் தெரிந்து கொண்டனர். துறைமுகக் களப்பயணம் சென்று வந்த மாணவ மாணவியரை குழல்வாய்மொழி அம்மாள் சிவன் நாடார் அறக்கட்டளை நிறுவனத்தின் நிறுவனர் சிவ பபிஸ்ராம், பள்ளியின் செயலர் சிவ டிப்ஜினிஸ் ராம், முதல்வர்கள் பொன் மனோன்யா மற்றும் புஷ்பா, தலைமை ஆசிரியர் மாரிக்கனி ஆகியோர் பாராட்டினர்.

# திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி கோயிலில் பக்தர்கள் பயன்பாட்டுக்காக மின்கல வாகனம் உபயம்



**திருச்செந்தூர், அக். 18:**

திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி கோயிலில் பக்தர்கள் பயன்பாட்டுக்காக தி சென்னை சில்க்ஸ் நிறுவனத்தினர் மின்கல வாகனத்தை உபயமாக வழங்கினர்.

திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி கோயிலில் மூத்த குடிமக்கள், கைக்குழந்தைகளை வைத்திருப்பவர்கள் மற்றும் மாற்றுத்திறனாளி பக்தர்கள் கிரிப்பிரகாரத்தில் வந்து செல்வதற்காக மின்கல வாகனங்கள் பயன்பாட்டில் உள்ளன.

இந்நிலையில் பக்தர்கள் பயன்பாட்டுக்காக தி சென்னை சில்க்ஸ் நிறுவனம் சார்பில் ரூ. 12 லட்சம் மதிப்பிலான 14 இருக்கைகள் கொண்ட மின்கல வாகனம் உபயமாக வழங்கப்பட்டது. திருக்கோயில் முன்பு வைத்து நடந்த நிகழ்ச்சியில் இணை ஆணையர் ராமுவிடம் தி சென்னை சில்க்ஸ் நிர்வாக இயக்குனர் வினித்குமார் மின்கல வாகனத்தை ஒப்படைத்து சாவியை வழங்கினார். நிகழ்ச்சியின் போது கோயில் கண்காணிப்பாளர் அஜித், தலைமை கண்காணிப்பு பொறியாளர் செல்வராஜ் உள்ளிட்ட பணியாளர்கள், தி சென்னை சில்க்ஸ் பொதுமேலாளர் ரமேஷ்குமார் மற்றும் பக்தர்கள் உடனிருந்தனர்.

# நேஷனல் பொறியியல் கல்லூரியில் மேல்நிலைப்பள்ளி மாணவ மாணவிகளுக்கான 11-வது வினாடி வினா போட்டி

**கோவில்பட்டி, அக் 18**

கோவில்பட்டி நேஷனல் பொறியியல் கல்லூரி, மேல்நிலைப்பள்ளியில் +1 மற்றும் +2 பயிலும் மாணவ மாணவிகளின் பொது அறிவுத் திறனை வெளிப்படுத்தும் நோக்கில் பதினோராவது மாநில அளவிலான மாபெரும் வினாடி வினா போட்டி வரும் 06.11.2025 (வியாழக்கிழமை) அன்று கல்லூரி வளாகத்தில் நடைபெற உள்ளது.இப்போட்டியின் முதல் சுற்று காலை 10.30 மணிக்கும், இறுதிச்சுற்று மதியம் 1.30 மணிக்கும் நடைபெறும். முதல் பரிசாக ரூபாய் 25,000-மும், இரண்டாம் பரிசாக ரூபாய் 15,000-மும், மூன்றாம் பரிசாக ரூபாய் 10,000-மும், மேலும் ஆறுதல் பரிசாக 10 அணிகளுக்கு தலா ரூபாய் 5,000-மும் என மொத்தம் ரூபாய் ஒரு லட்சம் வழங்கப்பட இருக்கிறது.போட்டியில் கலந்து கொள்ள ஆர்வமுள்ள மாணவ-மாணவிகள், கல்லூரியின் இணையதளமான www.nec.edu.in இல் போட்டி தொடர்பான முழுமையான விவரங்களை அறிந்து, அங்கு கொடுக்கப்பட்டுள்ள விண்ணப்பப் படிவத்தைப் பதிவிறக்கம் செய்து பூர்த்தி செய்து, பள்ளி முதல்வரின் கையொப்பத்துடன் கூகுள் பார்ம் https://bit.ly/necquiz2K25 வழியாகப் பதிவு செய்யலாம். அல்லது, பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பத்தை அஞ்சல் மூலமாக கல்லூரி முகவரிக்கு அனுப்பியும் பதிவு செய்யலாம். போட்டியில் கலந்து கொள்ளும் மாணவ மாணவிகள் மற்றும் அவர்களை அழைத்து வரும் ஆசிரியர்கள் / பெற்றோர்களுக்குப் மதிய உணவு வழங்கப்படும். தேவைப்பட்டால், போட்டிக்கு முந்தைய நாள் உணவு மற்றும் தங்கும் வசதியும் கல்லூரியில் ஏற்பாடு செய்து தரப்படும். பதிவு செய்ய வேண்டிய கடைசி நாள் 05.11.2025 ஆகும்.இந்த வினாடி வினா நிகழ்ச்சியை பிரபல விளையாட்டு விமர்சகர் மற்றும் குயிஸ் மாஸ்டர் டாக்டர் சுமந்த் சி. இராமன் தொகுத்து வழங்குகிறார். போட்டி குறித்து எழும் சந்தேகங்களுக்கு 73386 25232, 90801 97950, 94898 26698, 99436 48813 என்ற அலைபேசி எண்களில் தொடர்பு கொள்ளலாம் எனக் கல்லூரி முதல்வர் முனைவர் கே.காளிதாச முருகவேல் தமது செய்திக்குறிப்பில் தெரிவித்துள்ளார்.

<u>தென்காசி மாவட்டத்தில்</u>

# பொது சுகாதாரத்துறையின் சார்பில் முன்னேற்பாடு ஆய்வுக் கூட்டம்



**தென்காசி அக்.18:**

தென்காசி மாவட்ட ஆட்சியரக கூட்டரங்கில் தென்காசி மாவட்டத்தில் வருகின்ற நவம்பர் 2025 முதல் வாரத்தில் தேசிய நலவாழ்வு குழுமம் ஆய்வு மேற்கொள்ள உள்ளதை முன்னிட்டு பொது சுகாதாரத்துறையின் சார்பில் முன்னேற்பாடு ஆய்வுக் கூட்டம் தேசிய நலவாழ்வு குழும இயக்குநர் மருத்துவர் அருண் தம்புராஜ், மாவட்ட ஆட்சித் தலைவர் ஏ.கே.கமல்கிஷோர், ஆகியோர் தலைமையில் நடைபெற்றது.

இந்த ஆய்வுக் கூட்டத்தில் அரசு மருத்துவமனை மற்றும் ஆரம்ப சுகாதார நிலையங்களில் நடைபெற்று வரும் சேவைகள், கட்டிடங்கள், தேவைப்படுகின்ற மருத்துவ உபகரணங்கள் பற்றிய அறிக்கையினை சமர்ப்பித்தனர்.

இவ்வாய்வுக் கூட்டத்தில் பொது சுகாதார மற்றும் நோய் தடுப்பு மருந்துதுறை இணை இயக்குநர் கிருஷ்ணராஜ், இணை இயக்குநர் (நலப்பணிகள்) மருத்துவர் பிரேமலதா, மாவட்ட சுகாதார அலுவலர் மருத்துவர் கோவிந்தன், உதவி இயக்குனர் (தொழுநோய்) தர்மலிங்கம், தேசிய நலவாழ்வு குழுமம் மாநில திட்ட மேலாளர் மருத்துவர் திவ்யஸ்ரீ, முதன்மை மருத்துவ அலுவலர்கள், வட்டார மருத்துவ அலுவலர்கள், கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையம் மருத்துவ அலுவலர்கள், உள்ளாட்சி அமைப்பு சார்ந்த அலுவலர்கள், பொதுப்பணித்துறை (கட்டிடம்) மற்றும் சுகாதாரத்துறை சார்ந்த அலுவலர்கள், பணியாளர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# இலஞ்சி பாரத் மாண்டிசோரி மெட்ரிக் மேல்நிலைப்பள்ளியில் தீபாவளி பண்டிகை



**குற்றாலம் அக்.18**

இலஞ்சி பாரத் மாண்டிசோரி மெட்ரிக் மேல்நிலைப் பள்ளியில் தீபாவளி பண்டிகை சிறப்பாக கொண்டாடப்பட்டது. கல்வி ஆலோசகர் உஷாரமேஷ் தலைமை வகித்தார். பள்ளி முதல்வர் பாலசுந்தர், தலைமை ஆசிரியர் செல்வ லிங்கம் ஆகியோர் முன்னிலை வகித்தனர். விழாவானது இறைவணக்கப் பாடலுடன் தொடங்கியது. விழாவினை மாணவி முத்து ஜனனி தொகுத்து வழங்கினார்.மாணவி அருணலோஷினி விழாவில் வரவேற்புரையாற்றினார். விழாவில் எட்டாம் வகுப்பு பயிலும் மாணவ -மாணவியர்கள் பட்டாசு வெடிக்கும் போது கவனத்துடன் இருக்க வேண்டும் என்ற விழிப்புணர்வை அழகாக காட்சிப்படுத்தினர். மழலையர் பிரிவு முதல் ஐந்தாம் வகுப்பு வரை பயிலும் மாணவ மாணவியர்கள், தேவர்கள் மற்றும் தேவியர்கள் போல் வேடம் அணிந்து அணி வகுத்தனர். சிறப்பு பூஜை நடைபெற்றது. அனைத்து மாணவ மாணவியர்களுக்கும் கல்வி ஆலோசகர் உஷா ரமேஷ் இனிப்புகளை வழங்கினார். இறுதியாக மாணவி அஸ்கதி நன்றியுரையாற்றி விழா இனிதே நிறைவுற்றது. இவ்விழாவிற்கான ஏற்பாட்டினை பாரத் கல்வி குழுமத்தின் தலைவர் மோகன் கிருஷ்ணன், செயலாளர் டாக்டர். காந்திமதி மோகன கிருஷ்ணன், இயக்குனர் இராதா பிரியா, பள்ளி முதல்வர் பாலசுந்தர், தலைமை ஆசிரியர் செல்வ லிங்கம் ஆகியோர் செய்திருந்தனர்.

# திருச்செந்தூரில் அதிமுக சார்பில் பட்டாசு வெடித்து இனிப்பு வழங்கி கொண்டாட்டம்

**திருச்செந்தூர், அக். 18:**

அஇஅதிமுக 54வது ஆண்டு தொடக்க நாளையொட்டி திருச்செந்தூர் ஒன்றிய, நகர அதிமுக சார்பில் வஉசி திடல் அருகில் நேற்று நடந்த நிகழ்ச்சிக்கு ஒன்றிய செயலாளர் பூந்தோட்டம் மனோகரன் தலைமை வகித்தார். நகரச் செயலாளர் மகேந்திரன், ஜெ., பேரவை மாவட்ட தலைவர் கோட்டை மணிகண்டன், மாவட்ட இணை செயலாளர் சுரேஷ்பாபு, நகர துணைச் செயலாளர் செல்வசண்முகசுந்தர் ஆகியோர் முன்னிலை வகித்தனர். ஜெயலலிதா பேரவை தெற்கு மாவட்ட செயலாளர் விஜயகுமார் பொதுமக்களுக்கு இனிப்பு வழங்கினார். நிகழ்ச்சியில் எம்ஜிஆர் மன்ற மாவட்ட இணைச் செயலாளர்கள் மகாலிங்கம், அர்ச்சுணன், மாவட்ட துணை செயலாளர் ராஜாநேரு, ஜெ., பேரவை மாவட்ட துணைச் செயலாளர் ஆர்எம்கேஎஸ் சுந்தர், வழக்கறிஞர் ரவிச்சந்திரன், ஆறுமுகநேரி அரசகுரு, இளைஞர் பாசறை ஒன்றிய செயலாளர் நடுவை செல்வன், ஒன்றிய இளைஞரணி செயலாளர் ஜாண் வில்லியம்ஸ், ஜெ, பேரவை ஒன்றிய துணை செயலாளர் சுரேஷ், மகளிரணி பிச்சம்மாள், சுகிர்தா, சிரிலா, வார்டு செயலாளர் மணிமாறன், அஜித் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

<u>கோவில்பட்டியில்</u>

# முதியோருக்கு தீபாவளி பரிசுகள்: நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் மக்கள் நல இயக்கத்தினர் வழங்கினர்



**கோவில்பட்டி அக் 18**

கோவில்பட்டி நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் மக்கள் நல இயக்கம் சார்பில் முதியோருக்கு தீபாவளி புத்தாடை வழங்கப்பட்டது நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் மக்கள் நல அறக்கட்டளை சார்பாக வருடம் தோறும் முதியோர்களுக்கு தீபாவளி புத்தாடை வழங்க பட்டு வருகிறது அதே போல் இந்த வருடமும் தீபாவளிப்பு புத்தாடை வழங்கப்பட்டது நேதாஜி மக்கள் நல அறக்கட்டளை தலைவர் நேதாஜி பாலமுருகன் தலைமையில் கண்ணன் ரத்தினவேல் மதிமுத்து முன்னிலையில் நகர எம்ஜிஆர் இளைஞர் அணி இணைச் செயலாளர் மகேந்திரன் முதியோருக்கு புத்தாடை வழங்கினார் மற்றும் அறக்கட்டளை நிர்வாகிகள் கிருஷ்ணசாமி அயன் சேகர் காமராஜ் நாகராஜ் உள்பட பலர் கலந்து கொண்டனர்

<u>தென்காசி மாவட்ட</u>

# வேலைவாய்ப்பு அலுவலகத்தில் 5 ஆண்டுகளுக்கு மேல் காத்திருக்கும் இளைஞர்கள் உதவித்தொகை பெற விண்ணப்பிக்கலாம்

## கலெக்டர் ஏ.கே.கமல்கிஷோர் தகவல்

**தென்காசி அக்.18:**

தமிழ்நாடு அரசால் அறிவிக்கப்பட்டுள்ள வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கான உதவித்தொகை திட்டத்தின் கீழ் வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்து எவ்வித வேலை வாய்ப்பும் கிடைக்காமல் ஐந்து ஆண்டுகளுக்கு மேல் காத்திருக்கும் இளைஞர்களுக்கு உதவித்தொகை வழங்கப்பட்டு வருகிறது. பத்தாம் வகுப்பில் தோல்வியுற்றவர்களுக்கு மாதம் ரூ.200-ம், 10ம்வகுப்பு தேர்ச்சி பெற்றவர்களுக்கு மாதம் ரூ.300-ம், பன்னிரெண்டாம் வகுப்பில் தேர்ச்சி பெற்றவர்களுக்கு மாதம் ரூ.400-ம் மற்றும் பட்டதாரிகளுக்கு மாதம் ரூ.600-ம் 3 ஆண்டுகளுக்கு வழங்கும் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. இத்தொகை நேரடியாக மனுதாரர்களது வங்கி கணக்கில் வரவு வைக்கப்படும். இத்திட்டத்தில் பயன் பெற விரும்புவர்கள் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்து 5 ஆண்டுகளுக்கு மேல் காத்திருப்பவராகவும், தொடர்ந்து பதிவினை புதுப்பித்தும் இருக்க வேண்டும். SC/SCA/ST பிரிவினர் 45 வயதுக்குமிகாமலும், BC/BCM/MBC/OC பிரிவினர் 40 வயதுக்கு மிகாமலும் இருத்தல் வேண்டும். மனுதாரரின் குடும்ப ஆண்டு வருமானம் ரூ.72,000/- (எழுபத்திரண்டு ஆயிரம்) மிகாமல் இருக்க வேண்டும்.

வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்து ஓராண்டு நிறைவு பெற்ற மாற்றுத்திறனாளிகள் உதவித்தொகை கோரி விண்ணப்பிக்கலாம். அவ்வாறு விண்ணப்பம் செய்யும் மாற்றுத்திறனாளிகள் வேறு எந்த ஒரு அலுவலகத்திலும் உதவித்தொகை பெறாதவராக இருத்தல் வேண்டும். மாற்றுத்திறனாளிகளுக்கு வயது உச்ச வரம்பு, வருமான உச்சவரம்பு ஏதுமில்லை. ஒன்றாம் வகுப்பு முதல் பத்தாம் வகுப்பு வரை படித்தவர்களுக்கு மாதம் ரூ.600/- பன்னிரெண்டாம் வகுப்பு தேர்ச்சி பெற்றவர்களுக்கு மாதம் ரூ.750ம், பட்டதாரிகளுக்கு ரூ.1000/- வீதம் 10 ஆண்டுகளுக்கு வேலை வாய்ப்பற்றோர் உதவித் தொகை வழங்கும் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

அன்றாடம் கல்வி நிறுவனங்களுக்கு சென்று பயிலும் மாணவ / மாணவியர், பொறியியல், மருத்துவம், விவசாயம், சட்டம் போன்ற தொழிற் பட்டப்படிப்பு பயின்றவர்களுக்கு உதவித்தொகை வழங்கப்பட மாட்டாது. எனினும், தொலைதூரக் கல்வி அல்லது அஞ்சல்வழி மூலம் கல்வி கற்பவர்கள் உதவித் தொகை பெற விண்ணப்பிக்கலாம். தகுதி உள்ளவர்கள் வேலை வாய்ப்பு அடையாள அட்டை மற்றும் கல்விச் சான்றிதழ்கள், சாதிச் சான்றிதழ் ஆகியவற்றுடன் அலுவலக வேலை நாட்களில் தென்காசி மாவட்ட வேலை வாய்ப்பகத்திற்கு நேரில் வருகை புரிந்து அதற்கான விண்ணப்பத்தை பெற்றுக் கொள்ளலாம் அல்லது https://tnvelaivaaippu.gov.in என்ற இணையதளத்தின் வாயிலாகவும், பொது மற்றும் மாற்றுத் திறனாளிகள் அவர்களுக்குரிய விண்ணப்பத்தினை தனித்தனியே பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். விண்ணப்பத்தினை பூர்த்தி செய்து பொதுப் பிரிவினர் மட்டும் அத்துடன் இணைக்கப்பட்டுள்ள வருவாய்த்துறை சான்றில் கிராம நிர்வாக அலுவலர் மற்றும் வருவாய் ஆய்வாளர் முத்திரையுடன் கூடிய கையொப்பம் பெற்று வேலைவாய்ப்பு அடையாளஅட்டை, அசல் கல்விச் சான்றிதழ்கள், சாதிச் சான்றிதழ், மாற்றுச்சான்றிதழ் (TC), தேசிய மயமாக்கப்பட்ட வங்கி கணக்குப் புத்தகம், ஆதார்அட்டை, ரேசன் அட்டை ஆகியவற்றின் அசல் மற்றும் நகல்களுடன் அலுவலக வேலை நாட்களில் கதவு எண்.168, முகமதியா நகர்(எபினேசர் டைல்ஸ் பின்புறம்), குத்துக்கல்வலசை அஞ்சல், தென்காசி. என்ற முகவரியிலுள்ள மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலகத்திற்கு நேரில் வருகை புரியுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

விண்ணப்பதாரர் அரசுத் துறை / தனியார்த்துறையில் எந்த விதமான ஊதியம் பெறும் பணியிலோ அல்லது சுயவேலை வாய்ப்பில் ஈடுபடுபவராகவோ இருத்தல் கூடாது. மேலும் விண்ணப்பதாரர் தனியாரிடமிருந்தோ அல்லது அரசிடமிருந்தோ வேறு எந்த வகையிலும் எந்த விதமான உதவித்தொகையும் பெறுபவராக இருத்தல் கூடாது. ஏற்கனவே வேலை வாய்ப்பற்றோர் இளைஞர்களுக்கான உதவித்தொகை பெற்றிருப்பின் மீண்டும் உதவித்தொகை பெற இயலாது என கலெக்டர் ஏ.கே. கமல் கிஷோர், தெரிவித்துள்ளார்.

Printed, Published and Owned by S.Manimaran and Printed at Manimaran Printers
11/78, Fourway Main Road, Gangaikondan, Tirunelveli-627352
Ph: 0462- 2486789
E-Mail: nellaiedi@thinaboomi.com
RNI.Regn No.66774/97
EDITOR: S.MANIMARAN
Subject to Madurai Jurisdiction Only

# இலத்தூர் பாரத் கல்வியியல் கல்லூரியில் தீபாவளி கொண்டாட்டம்



**தென்காசி அக்.18:**

பாரத் கல்வியியல் கல்லூரியில் தீபாவளி பண்டிகை வெகு சிறப்பாக கொண்டாடப்பட்டது. நிகழ்ச்சியில் கல்லூரியின் தாளாளர் மோகனகிருஷ்ணன் தலைமை தாங்கினார். அவர்களுடன் கல்லூரியின் முதல்வர் மற்றும் இருபால் ஆசிரியர்கள் கலந்து கொண்டனர். நிகழ்ச்சியானது தமிழ்த்தாய் வாழ்த்துடன் தொடங்கப்பட்டது. எம் கல்லூரி மாணவி ஆஷிகா வரவேற்புரை ஆற்றினார். மேலும் கல்லூரி மாணவி இசைவாணி தீபாவளி பண்டிகை பற்றி சிறப்புரை ஆற்றினார் . அதனை தொடர்ந்து பண்டிகையை சிறப்பிக்கும் விதமாக பல்வேறு நிகழ்ச்சிகள் கொண்டாடப்பட்டன. நிகழ்ச்சியின் இறுதியாக கல்லூரி மாணவி அனீஸ் பாத்திமா நன்றியுறை கூற நாட்டுப் பண் உடன், இனிப்பு வழங்கி விழா இனிதே! நிறைவுற்றது.



**தென்காசி தெற்கு மாவட்ட நிர்வாகிகளுக்கு வே. ஜெயபாலன் இனிப்பு வழங்கி தீபாவளி நல்வாழ்த்துக்களை தெரிவித்தார். இதில் தலைமைச் செயற்குழு உறுப்பினர் செல்லத்துரை, நகர செயலாளர் வெங்கடேசன் உட்பட அனைவருக்கும் தீபாவளி வாழ்த்துக்களை தெரிவித்தார்.**



**தென்காசி தெற்கு மாவட்ட திமுக அலுவலகத்தில் தீபஒளி திருநாளை முன்னிட்டு தெற்கு மாவட்ட செயலாளர் வே.ஜெயபாலனுக்கு திமுக மாநில மருத்துவரணி இணைச் செயலாளர் கலைகதிரவனுக்கும் கடையநல்லூர் நகர் மன்ற தலைவர் மூப்பன் ஹபீபுர் ரஹ்மான் பட்டாசு மற்றும் இனிப்பு வழங்கி வாழ்த்துக்களை தெரிவித்துக் கொண்டார். உடன் ஆலங்குளம் மத்திய ஒன்றிய பொறுப்பாளர் சேக்முகமது, தெற்கு மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் டி .ஆர் .கிருஷ்ணராஜா, கடையநல்லூர் நகர இளைஞரணி துணை அமைப்பாளர் சுகுமார் மற்றும் முருகானந்தம் ஆகியோர் கலந்து கொண்டனர்**

# அயல்நாடுகளுக்கு செல்பவர்கள் தமிழக அரசின் நலவாரியத்தில் பதிவு செய்ய வேண்டும்

## கலெக்டர் இளம்பகவத் தகவல்

**திருச்செந்தூர் அக்.18-**

அயல்நாடுகளுக்கு பணி, கல்வி பயிலச் செல்பவர்கள் அயலகத் தமிழர் நல வாரியத்தில் பதிவு செய்ய வேண்டும் என்று மாவட்ட ஆட்சியர் க.இளம்பகவத் தெரிவித்துள்ளார்.

வேலைவாய்ப்பு, கல்வி, வணிகம் போன்ற காரணங்களுக்காக தமிழர்கள் அயல்நாடுகளுக்கு புலம்பெயர்வது சமீப காலங்களில் அதிகரித்துள்ளது. இவ்வாறு புலம்பெயர்ந்து வெளிநாடுகளிலும், இந்தியாவின் மற்ற மாநிலங்களிலும் வாழும் தமிழர்களின் நலன் காக்க தமிழ்நாடு முதலமைச்சர் ஆணையின்படி அரசு மற்றும் அரசு சாரா உறுப்பினர்கள் 15 நபர்களைக் கொண்டு கார்த்திகேய சிவசேனாபதி தலைமையில் அயலகத் தமிழர் நல வாரியம் அமைக்கப்பட்டு கடந்த 24.12.2022 முதல் செயல்பட்டு வருகிறது.

அவ்வாரியம் மூலம் அயல்நாடுகளில் பணிபுரியும் / கல்வி பயிலும் தமிழர்களுக்காக பல்வேறு நலத்திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளது. இவ்வாரியத்தில் உறுப்பினராக வெளிநாடுகளிலும், இந்தியாவின் பிற மாநிலங்களிலும் வாழும் 18 முதல் 55 வயதுடைய அயலகத் தமிழர்கள் கீழ்க்காணும் இரு பிரிவுகளில் வாரியத்தில் தங்களை பதிவு செய்துக்கொள்ளலாம்.

அயலகத் தமிழர் (வெளிநாடு) இந்திய கடவுச்சீட்டு மற்றும் தகுந்த ஆவணங்களுடன் அயல்நாடுகளில் பணிபுரியும் / கல்வி பயிலும் தமிழர்கள் மற்றும் Emigration Clearance பெறப்பட்டு அயல்நாடு செல்ல உள்ள தமிழர்கள் இப்பிரிவில் உறுப்பினராக தகுதியுடையவர்கள் ஆவார்கள்.

அயலகத் தமிழர் (வெளி மாநிலம்): இந்தியாவின் பிற மாநிலங்களில் (தமிழ்நாட்டிற்கு வெளியே) ஆறு மாதங்களுக்கு மேல் வசிக்கும் தமிழர்கள் இப்பிரிவில் உறுப்பினராக தகுதியுடையவர்கள் ஆவார்கள். அவ்வாறு பதிவு செய்பவர்களுக்கு தமிழ்நாடு அரசின் அயலகத் தமிழர்களுக்கான புகைப்பட அடையாள அட்டை வழங்கப்படும்.

இந்த அடையாள அட்டையினைக் கொண்டு வாரியத்தினால் நடைமுறைப்படுத்தப்படும் காப்பீட்டு திட்டங்களான விபத்து காப்பீடு, தீவிர & தொடர் சிகிச்சை தேவைப்படும் நோய்களுக்கான காப்பீடு (Critical illness), கல்வி உதவித்தொகை திட்டம் (Scholarship Scheme), திருமண உதவித்தொகை திட்டம் (Marriage Assistance Scheme), அயலக தமிழர் நல வாரியத்தின் இறந்த உறுப்பினர்களின் குடும்ப உறுப்பினர்களுக்கு நிதியுதவி, தமிழ்நாடு பன்னாட்டுத் திறன் மேம்பாட்டுத் திட்டம் (TN Skill Internation), அயலகத் தமிழர் நல வாழ்வுக்கான மருத்துவ உதவி மையம் உள்ளிட்ட திட்டங்களில் அயலகத் தமிழர்கள் பயன்பெறலாம்.

அயலகத் தமிழர்களுக்கான தமிழ்நாடு அரசின் இப்புகைப்பட அடையாள அட்டையினைக் கொண்டு மேற்கூறிய நலத்திட்டங்களோடு எதிர்காலத்தில் செயல்படுத்தப்பட உள்ள நலத்திட்டங்களிலும் பயன் பெறலாம்.

எனவே, இனிவரும் காலங்களில் வெளிநாடுகளுக்கு வேலைக்கு / கல்வி பயில செல்லும் தமிழர்கள் அயலகத் தமிழர் நல வாரியத்தில் பதிவு செய்யவும், அயலகத் தமிழர்களுக்காக செயல்படுத்தப்படும் தமிழ்நாடு அரசின் நலத்திட்டங்கள் பற்றி அனைவரும் அறிந்து கொள்ளவும், வெளிநாடுகளுக்கு வேலை நிமித்தம் செல்ல விரும்பும் தமிழர்கள், அவர்களுக்கு அருகில் உள்ள தமிழ்நாடு அரசின் முன்பயண புத்தாக்கப் பயிற்சி மையங்களை அணுகி பயிற்சி பெற்றுச் செல்ல அறிவுறுத்தப்படுகிறது.

அயலகத் தமிழர் நல வாரிய அடையாள அட்டையினை பெறுவதற்கான இணைய வழி பதிவு தொடங்கப்பட்டுள்ளது. இதற்கான அனைத்து வசதிகளும், விளக்கங்களும் https://nrtamils.tn.gov.in என்ற இணையதளத்தில் ஏற்படுத்தப்பட்டுள்ளது என மாவட்ட ஆட்சியர் க.இளம்பகவத், தெரிவித்துள்ளார்.

**தவறிவிட்டது**

கரிவலம்வந்தநல்லூர் பஸ் நிறுத்தம் அருகில் உள்ள கடையில் ஜெராக்ஸ் எடுத்து விட்டு வரும்போது எனது ஒரிஜினல் 12ம் வகுப்பு பள்ளி மதிப்பெண் சான்றிதழ் எண். HSS 2044570 (MAR 2019) Reg. No. 1843057487, (ஆ.ம.செ. அரசு மேல்நிலைப்பள்ளி கரிவலம்வந்த நல்லூர்) வைத்திருந்த பை தொலைந்து விட்டது. கண்டு எடுத்தவர்கள் கீழ்க்கண்ட முகவரியில் கொடுத்து உதவ வேண்டுகிறேன்.
ச.சங்கர், த/பெ. சமுத்திரம்,
7/159, பிள்ளையார் கோவில் தெரு,
பச்சேரி, கரிவலம்வந்த நல்லூர்,
சங்கரன்கோவில் வட்டம்.
8489648870.

**கனம் கோட்டாட்சியர் நீதிமன்றம், சங்கரன்கோவில்,**

மோ. இன்னாசி, த.பெ. மோசை,
க.எண். 106, வடக்கு தெரு ,
ரெங்கசமுத்திரம் கிராமம்,
திருவேங்கடம் வட்டம், .
மனுதார்,
1. வட்டாட்சியர், திருவேங்கடம்
2. சார் பதிவாளர்,
மேல நீலிதநல்லூர்,
எதிர்மனுதாரர்,

**அறிவிப்பு**

எனது தாயார் செல்லத்தாய், க. பெ. மோசை என்பவர் கடந்த 05.09.2017 அன்று மேற்படி முகவரியில் வைத்து இறந்ததை எதிர்மனுதாரரின் இறப்பு பதிவேட்டில் பதிவு செய்ய வேண்டி மேற்படி நீதிமன்றத்தில் மனுதாக்கல் செய்துள்ளேன். அம்மனு மீது யாருக்கேனும் ஆட்சேபணை இருந்தால் இந்த அறிவிப்பு கண்ட 30 தினங்களுக்குள் மேற்படி கோட்டாட்சியர் நீதிமன்றத்தில் நேரில் ஆஜராகி தங்கள் ஆட்சேபனையை தெரிவித்து கொள்ள வேண்டும் என இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.
மோ. இன்னாசி,
ரெங்கசமுத்திரம்.

**கனம் கோட்டாட்சியர் நீதிமன்றம், தென்காசி, RDOTKS.பி.ப.வ. எண். 33 /2025/B2**

நா. கருப்பசாமி,
த.பெ. நாராயணன்,
க.எண். 2/5,
உலைக்கூடத்தெரு , நகரம்,
கடையநல்லூர் வட்டம்.
மனுதார்,
வட்டாட்சியர், கடையநல்லூர்,
எதிர்மனுதாரர்,

**அறிவிப்பு**

கருப்பசாமி , த.பெ. நாராயணன் ஆகிய நான் கடந்த 01.06.1985 அன்று மேற்படி முகவரியில் வைத்து பிறந்ததை எதிர்மனுதாரரின் பிறப்பு பதிவேட்டில் பதிவு செய்ய வேண்டி மேற்படி நீதிமன்றத்தில் மனுதாக்கல் செய்துள்ளேன். அம்மனு மீது யாருக்கேனும் ஆட்சேபணை இருந்தால் இந்த அறிவிப்பு கண்ட 30 தினங்களுக்குள் மேற்படி கோட்டாட்சியர் நீதிமன்றத்தில் நேரில் ஆஜராகி தங்கள் ஆட்சேபனையை தெரிவித்து கொள்ள வேண்டும் என இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.
நா.கருப்பசாமி,
நகரம்.

